

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத்தின் முன்னோடிகள் 2000 பேருக்கு விழாக்கால பரிசு வழங்கும் விழா 17.10.2025 அன்று கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் மேயர் பிரியாராஜன், கலாநிதிவீராசாமி எம்.சி., செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு அரிமா சங்கத்தின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தமிழ்நாடு வணிக பேரவை தலைவர் விக்ரமராஜா, நகர கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், அரிமா சங்க நிர்வாகிகள் மணிசங்கர், முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 135 வது வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டக் கழகப் பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு தலைமையில் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் கோ.சு.மணி, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஷ்வரன் எம்.சி, ஜி.டி.அம்பேத்கார், வி.பி.எஸ்.ஜனார்த்தா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**இ.கண்ணப்பன் முன்னிலையில்! ஜமாஉசேன், எஸ்.சுரேஷ், ஜே.பாபு, சி.எம்.ராஜா, டோமினிக், வி.சிவப்பிரகாஷ் பங்கேற்பு!**

# மாதவரம் 16-வது வட்டம் மணலி புது நகர் எல் பி எஃப் ஆட்டோ ஓட்டுநர் சங்க பெயர் பலகை!

## புழல் எம்.நாராயணன் திறந்து வைத்தார்!

மாதவரம், அக்.20-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி, 16வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில் எல்பி எஃப் ஆட்டோ ஓட்டுனர் சங்க பெயர் பலகை திறந்து வைக்கப் பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் மணலி புது நகர் திருவள்ளுவர் சிலை அருகே அமைந்துள்ள எல்பி எப் ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் ஆண்டு விழா மற்றும் சங்க பெயர் பலகை திறப்பு விழா தொமுச நிர்வாகிகள் எஸ். ராஜசேகர், எஸ். யுவராஜ், ஜி ராஜவேல், ஜி. ஜெய்மோகன், எல். இளங்கோ,மணலி புது நகர் சி. எம்.ராஜா, மாதவரம் ஆட்டோ தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் ஜே.ஜமா உசேன், எஸ். சுரேஷ், குமார், ஜே .பாபு, ஆர். லோகநாதன், ஏ.பாபு என்கிற எத்திராஜ், எம் சிற்றரசன், எஸ். அடைக்கல ராஜ், சட்ட ஆலோசகர் பா. கார்த்திகேயன் ஆகியோர் வரவேற்றனர்.

மணலி புதுநகர் ஆட்டோ நிறுத்த நிர்வாகிகள் எல். சரவணன், டி. செல்வம், ஆர். லோகநாதன், ஜி. நெடுஞ்செழியன், எம். மோகன்ராஜ், டி. விமல், சந்திரன், கே. சாமுவேல் ஆகியோர் முன்னிலையில்,

கமிட்டி உறுப்பினர்கள் ஜே.சம்பத், எம்.வெங்கடேசன், எம்.முத்து, கே.மணி, மணலி புதுநகர் ஆட்டோ ஓட்டுனர் சங்க உறுப்பினர்கள் இ. சுரேஷ், பி. சந்துரு, டி. வீரா, வீ. கார்த்திகேயன், எஸ். மைக்கேல், எஸ். முருகன், ஆர். தனசேகர், ஜி. தனபால், எஸ். வினோத், எம். தினகரன், இ. எஸ். விஜய கீர்த்தி,ஆர். சுப்பிரமணி, ஆர். ஆனந்தன், எ. பாண்டியன், ஷாபி, விஜயன், எம். சுசீந்திரன், பி சுப்பிரமணி, வி. ஹரி, டி. சிவா,ஆர். பிரகாஷ், எம். கணேஷ், வி. ஏழுமலை, ஆர்.சுந்தர், பி. நடராஜன், ஆர். சங்கர்,எஸ். அசோகன், ஆர். லோகேஷ், குமார்,எஸ்.முகுந்தன், ஆர் மதுரை எஸ் முருகன், ஏ. காதர் பாட்சா, ஜே. கமாலுதீன், ஆர். குமரன்,எம். மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆட்டோ ஓட்டுநர் சங்க பெயர் பலகையை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மணலி புதுநகர் சி. எம். ராஜா, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், எலந்தனூர் வி. சிவபிரகாஷ், செமின் எடிசன், செபின் எடிசன், ரூப்குமார், விஜய், விஸ்வநாதன், தினேஷ், கவின், யாசின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**விழுப்புரம் மாவட்டத்தில்**

# செஞ்சியில் இருந்து மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 20 -

விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம்மேல் கூடலூர் கிராமத்திற்கு புதியபேருந்து சேவை இயக்க வேண்டுமென அக் கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செஞ்சியில் இருந்து மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவை இயக்கம் நிகழ்ச்சி செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக செஞ்சி பணிமனை மேலாளர் சுரேஷ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்.ஏ. கலந்துகொண்டு செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து மாவட்டம் பாடி, பாலப்பட்டு, தென்பு புதுப் பட்டு, கல்லாலிப்பட்டு, வவ்வால் குன்றம், வழியாக மேல் கூடலூர் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்கஏழுமலை, வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,

தொ.மு.ச. மத்திய துணைப் பொதுச் செயலாளர் லூர்து இமானுவேல், செஞ்சி பணிமனை தொ.மு.ச. நிர்வாகிகள் அரிகிருஷ்ணன், தியாகராஜன், காதர் நவாஸ், ராஜேந்திரன், தங்கமணி, புருஷோத்தமன், தனசேகர், ஏழுமலை, நிர்வாகிகள்தமிழரசன், நூர்ஜகான் ஜாபர், தொண்டரணி பாஷா,சக்திவேல், இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பெங்களூரு புறப்பட்ட**

# ஏர் இந்தியா விமானத்தில் திடீர் இயந்திரக் கோளாறு!

சென்னை,அக்.20-

சென்னை விமான நிலையத்தில் இருந்து பெங்களூரு புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தில் இயந்திரக் கோளாறு கண்டறிபட்ட தால் அந்த விமானம் புறப்பட்ட இடத்திற்கே கொண்டு வந்து நிறுத்தப் பட்டதால் 109 பேர் நல் வாய்ப்பாக உயிர் தப்பினர்.

சென்னையில் 104 பணிகள், 5 விமான ஊழியர்கள் என 109 பேருடன் ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணியளவில் பெங்களூரு புறப்பட்டது. விமானம் ஓடு பாதையில் ஓடத் தொடங்கியபோது விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கண்டுபிடித்தார்.

இதையடுத்து அந்த விமானம் ஓடுபாதையில் புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விமான நிறுவன பொறியாளர்கள் வந்து விமானத்தில் ஏற்பட்டிருந்து இயந்திரக் கோளாறை சரிசெய்தனர்.

இதையடுத்து விமானம் வழக்கமான நேரத்தைவிட தாமதமாக பிற்பகல் 12 மணிக்கு பெங்களூரு புறப்பட்டு சென்றது.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறை விமானி உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்ததால் 109 பேரின் மேற்பட்டோர் நல்வாய்ப்பாக உயிர்தப்பினர்.

விமானத்தில் 104 பயணிகள் அனைவரும் விமானத்துக்குள்ளேயே அமர வைக்கப்பட்டதால் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

இந்த சம்பவத்தால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு நிலவியது.

சமீபகாலமாக விமானத்தில் அடிக்கடி இயந்திரக் கோளாறு ஏற்படுவது பயணிகள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு- குளிக்கத் தடை!

சென்னை,அக்.20-

கனமழை காரணமாக, கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதையடுத்து, சுற்றுலாப் பயணிகள் அருவியல் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி அடிவாரங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், போளுவாம்பட்டி வனச்சரகத்திற்கு உள்பட்ட கோவை குற்றாலம் அருவியில் பெய்த மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், பொதுமக்கள் அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்படுவதாக வனத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாள்கள் என்பதால் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் கோவை குற்றாலத்திற்கு வரும் நிலையில், வனத் துறையினர் சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுத்து, கண்காணித்து வருகின்றனர்.

இது குறித்து வனத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், "கோவை மாவட்டத்திற்கு ஆரஞ்சு அலார்ட் கொடுக்கப்பட்டதாலும், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையாலும், கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்பு கருதி பொது மக்கள் குளிக்க அனுமதி மறுக்கபட்டுள்ளது.

மேலும் பண்டிகை காலம் என்பதால் பொது மக்கள் பார்வைக்கு மட்டும் திறக்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மகாவீர் நாளை முன்னிட்டு,**

# இறைச்சிக் கூடங்கள் நாளை மூடல்!

## பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,அக்.20-

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் (கால்நடை மருத்துவப் பிரிவு) கட்டுப்பாட்டில் இயங்கும் 4 இறைச்சிக் கூடங்களும் நாளை (21.10.2025 -செவ்வாய்க்கிழமை) மகாவீர் நிர்வான் தினத்தை முன்னிட்டு அரசு உத்தரவின்படி மூடப்படுகின்றன. இதேபோல், ஜெயின் கோயில்களிலிருந்து 100 மீட்டர் சுற்றள வில் அமைந்துள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூடப்பட்டு இறைச்சி விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த உத்தரவினை செயல்படுத்த வியாபாரிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டை பி.ஏ.ரபீக்

### அக்டோபர் 20 (1993)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை உக்கடம் பகுதி 35 மற்றும் 41வது வார்டு இளைஞர் அணிச் செயலாளராகவும், கோவை மாநகர் இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

2007ல் திருநெல்வேலியில் நடைபெற்ற இளைஞர் அணி முதல் மாநாட்டு கொடிமேடைக்கு இவரது பெயர் சூட்டப்பட்டது

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கும்முடிப்பூண்டி கி. வேணு

### அக்டோபர் 20 (2023)



சிறுவயதிலேயே கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கிய இவர், கிளைச் செயலாளராகவும் – 1973 முதல் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டச் செயலாளராக நான்கு முறையும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை, கும்மிடிபூண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவர்.

"கழகம் களம் அமைத்த நேரத்திலெல்லாம், அந்தக் களத்திலே முதல் அணியின் சிப்பாய்களில் ஒருவராக இருந்து தன்னை தீயாகத்தீயிலே புடம்போட்டு எடுத்துக் கொண்டவர் தம்பி வேணு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

2021ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்ததோடு, "தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்." என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**